மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அ.சா.4 சோனா

நாள். 28.10.2022

**எதிரி 1 தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் சைக்காட்ரிக்கா என்றால் சைக்காலஜிட். எதிரி 1 க்கும், என்னுடைய சித்தப்பா பொண் ஜோஷ்மாவுக்கும் உள்ள உறவு குறித்து ஏதாவது சங்கதிகள் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா என்றால் வந்தது. ஜோஸ்மா தான் என்னிடம் அந்த விஷயங்களை சொல்லியிருக்கிறாள். நான் அவளுக்கு ஆலோசனை எதுவும் சொல்லவில்லை. மற்றபடி எனக்கு, ஜோஷ்மா எழுத்து மூலமாக, வாட்ஸ் அப் மெசேஜ், எஸ்.எம்.எஸ், ஏதாவது சங்கதிகளை பகிர்ந்திருக்கிறாளா என்றால் இல்லை. என்னை உதவி ஆணையர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். ஆர்.டி.ஒ விசாரித்தார், வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. ரூ.40000/- பணம் எதிரிகள் கேட்டதாகவும், 20000/- பணம் தருவதாக ஜோஷ்மா பெற்றோர்கள் ஒப்புக்கொண்டதாக முதல் விசாரணையில் சொல்லியிருக்கும் சங்கதிகளை உதவி ஆணையர், ஆர்.டி.ஒ விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அந்த 40000/- என்பது திருமண நிகழ்வுகளை புகைப்படம் எடுத்ததற்கான செலவு என்றால் சரிதான். போட்டோ செலவை பேர்பாதியாக இருவீட்டாரும் பகிர்ந்து கொள்வது மரபு தான் என்றால் சரிதான். என்னிடம், எதிரிகளைப் பற்றி ஜோஷ்மா சொன்னதாக முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை உதவி ஆணையர், ஆர்.டி.ஓ விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி 2, ரூ.2,00,000/- வேண்டும் என்று அ.சா.1 டம் போனில் கேட்டு தொல்லை செய்தார் என்பதை உதவி ஆணையர், ஆர்.டி.ஓ விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறேன். 6 வருட காலமாக ஜோஷ்மாவின் திருமண வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை என்னிடம் சொல்வாள் என்று சொல்லியிருக்கிறேன். அது சரிதான். ஜோஷ்மா என்னிடம் 6 வருட காலம் அவளுடைய குடும்ப வாழ்க்கை பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறாள்

என்பதற்கு எழுத்து பூர்வமான ஆதாரம் இல்லை என்றால் சரிதான். ஜோஷ்மா திருமண நிகழ்வுகள் குறித்து செல்லும்போது காவல்நிலையம் செல் என்று அறிவுரை சொல்லியிருக்கிறேன். எதிரி குடும்பத்தாரோடும், சித்தப்பா குடும்பத்தாரோடும், ஜோஷ்மா திருமண வாழ்க்கை குறித்து நடந்த பேச்சுவார்த்தையில் நான் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சாத்துா இரவீந்திரனின் அண்ணன் மகள் என்றும், நெருங்கிய உறவு காரணமாக நான் அக்கரை சாட்சியாக இந்த வழக்கில் உருவாக்கப்பட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி 1 தரப்பு குறுக்கு விசாரணையை, எதிரி 2,3 தரப்பினர் ஏற்றுக் கொள்கிறார்கள்.